## இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் - 2016

இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின்2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து,இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

நியம இலக்கம் 7 இன் பிரகாரம் பயன்தரு ஆயுட்காலம் வருடத்திற்குள் மீளாய்வு செய்யப்படாத காரணத்தினால் பூரணமாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட ஆனால் தற்போது பயன்படுத்தப்படுகின்ற ரூபா 84,383,159 கிரயமான கட்டிடம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் உள்ளபடியான கிரயம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட இருப்பு மீதி ரூபா 425,959 என்பதுடன் பௌதீகச் சோதனையின் போது கணக்கிடப்பட்ட இறுதி இருப்பு மீதி ரூபா 3,526,748 ஆகும். இதன் பிரகாரம் இறுதி இருப்பு மீதி கணக்குகளில் ரூபா 3,100,789 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கட்டிடத்திற்கான பெறுமானத்தேய்வு ரூபா 11,657,139 கூடுதலாகக் கணக்கிடப்பட்டிருந்தது.

### 2.2.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் கணக்குகள் மீதி, இலங்கை சுற்றுலா அபிவிருததி அதிகாரசபை மற்றும் இலங்கை சுற்றுலாத்துறை மேம்படுத்தல் பணியகத்தின் கணக்கு மீதிகளுடன் ஒப்பிடும் போது பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்கு விடயம் | | இலங்கை சுற்றுலாத்துறை ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் கணக்கின் பிரகாரம் | இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபையின் கணக்குகள் பிரகாரம் | இலங்கை சுற்றுலாத்துறை பணியகத்தின் கணக்கின் பிரகாரம் | வேறுபாடு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (அ) | பெறவேண்டிய மீதிகள் மற்றும் கடன்பட்டோர் | 8,487,711 | 6,512,810 | - | 1,975,901 |
| (ஆ) | கடன் கொடுத்தோர் | - | 5,849,528 | - | 5,849,528 |
| (இ) | கடன்பட்டோர் | 3,774,878 | - | 114,626 | 3,660,252 |

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கீழே காணப்படுகின்ற ஒவ்வொரு விடயங்களுக்கும் முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| விடயம் | | | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (அ) | பெறவேண்டிய கணக்குகள் | | | |
| | (i) | வியாபாரக் கடன்பட்டோர் | 22,302,688 | மீதி உறுதிப்படுத்தல்கள் |
| | (ii) | வைப்புக்கள் மற்றும் ஏனைய பெறுவனவுகள் | 3,492,000 | மீதி உறுதிப்படுத்தல்கள் |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் (2008 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதி) | | 128,373,195 | மீதியைக் கண்டுபிடித்த முறையினைக் காண்பிக்கின்ற விரிவான அறிக்கை |
| (இ) | நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்ட அபிவிருத்திச் செலவினம் | | 1,788,459 | விரிவான பட்டோலை |

## 2.3 பெறவேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வியாபாரக் கடன்பட்டோரின் கீழ் காட்டப்பட்ட மீதிகளில் ரூபா 16,140,932 ஆனது வருடம் 1 இற்கு அதிகமான வருடம் 3 இற்குக் குறைவான காலமாகவும் ரூபா 6,161,757 ஆன தொகை வருடம் 1 இற்கு குறைவான காலமாகவும் மீதிகளில் உள்ளடங்கியிருந்தது. பெறவேண்டிய மீதிகளில் 2019 வருடத்தில் மே மாதம் வரையில் ரூபா 20,799,543 ஆனது வியாபாரக் கடன்பட்டோர் மீதிகளில் அறவிடப்படாது இருந்தது.

(ஆ) அட்டுறு செலவினத்தின் கீழ் காட்டப்பட்ட மீதியினுள் ரூபா 1,883,486 ஆனது 2 வருடங்களுக்கு மேலான காலமாகவும் ரூபா 641,735 ஆனது 1 வருடத்திற்கு கூடியதும் 2 வருடங்களுக்கு குறைவானதுமான காலமாகவும் மீதிகளில் உள்ளடங்கியிருந்தது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (அ) 4.2.5 ஆம் பிரிவு | தொழிற்படு மூலதனத்தை செயற்திறனாக முகாமை செய்யும் நோக்கில் கடன் கொடுத்தோர் காலப்பகுப்பாய்வு, இருப்பு காலப்பகுப்பாய்வு, மற்றும் பழைமை வாய்ந்த காலாவதியான மற்றும் மெதுவான நகரும் இருப்பும் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கூற்று என்பன பணிப்பாளர் சபையால் மாதாந்தம் மீளாய்வு செய்ய வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 8.3.9 ஆம் பிரிவு | சுற்றறிக்கையின் பிரகாரம் வரிசை அமைச்சிற்காக செலவினங்கள் செய்ய முடியாதாயினும், அதற்கு முரணாக மீளாய்வாண்டின் போது ரூபா 4,887,871 ஆன தொகை தளபாடங்கள் கொள்வனவுக்காகச் செலவிடப்பட்டிருந்தது. |

## 2.5 போதியளவான அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கொடுக்கல் வாங்கலின் தன்மை | கொடுக்கல் வாங்கல் விடயம் | பெறுமதி | அவதானிப்பு |
|---|---|---|---|
| | | ரூபா | |
| தங்குமிடக் கட்டணம் | சமுத்திரா ஹோட்டல் அறைகளுக்கான தங்குமிடக் கட்டணம் | 4,050,000 | சமுத்திரா பயிற்சி ஹோட்டலில் அறை இலக்கம் 202 இல் 2016 மே மாதம் 25 ஆந் திகதி தொடக்கம் 2017 ஆகஸ்ட் மாதம் 17 ஆந் திகதி வரையில் வெளித்தரப்பினர் தங்கியிருந்தமையுடன் தங்குமிடக் கட்டணமாக அறவிடப்பட வேண்டிய தொகை இற்றை வரையில் அறவிடப்படவில்லை. மேற்கூறிய தங்குமிட வசதி வழங்கப்பட்டபோது முகாமைத்துவத்தினால் எதுவித முற்பணத் தொகையும் பெறப்பட்டோ அல்லது எழுத்து மூலமான உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டிருந்தமையோ அவதானிக்கப்படவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம்,2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 132,127,218 மிகையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 112,721,045 ஆக இருந்தமையால், நிதி விளைவுகளில் ரூபா 19,406,173 ஆன முன்னேற்றத்தை காட்டியது. வழங்கல் மற்றும் காகிதாகிச் செலவுகள் ரூபா 48,150,555 இனால் அதிகரித்த போதிலும், சுற்றுலாத்துறை அபிவிருத்தி வரி வருமானம் ரூபா 16,085,375 இனால் மற்றும் குடியகல்வு வரி வருமானம் ரூபா 46,428,021 இனால் அதிகரித்தமை நிதி விளைவுகளின் முன்னேற்றத்திற்கு அடிப்படைக் காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2012 வருடத்திலிருந்து 2014 வருடம் வரை நிதி விளைவுகள் முன்னேற்றமடைந்திருந்தன. 2015 வருடத்திற்கு ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நிதி விளைவுகளில் முன்னேற்றம் நூற்றுக்கு 17.2 வீதமாகும். எனினும் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் சம்பந்தமாக பெறுமானத்தேய்வு சீராக்கும் போது 2012 வருடத்தில் ரூபா 168,578,186 ஆக நிறுவகத்தின் பங்களிப்பு மீளாய்வாண்டு வரை சீராக அதிகரித்திருந்ததுடன் அது 2016 வருடத்தின் போது ரூபா 353,488,244 ஆகக் காணப்பட்டது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான நிறுவகத்தின் வருமானம் ரூபா 532 மில்லியன் என்பதுடன் அது முன்னைய ஆண்டின் ரூபா 442 மில்லியனுடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 20.36 வீதம் அதிகரிப்பாக இருந்தது. அதேநேரம் முன்னைய ஆண்டில் கற்பித்தல், பயிற்சி அளித்தல் மற்றும் அபிவருத்தி நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 329 மில்லியனுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்குள் அதற்காக ரூபா 399 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் நூற்றுக்கு 21.27 வீத அதிகரிப்பைக் காட்டியது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்து கொள்ளும் இலக்கிடப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கி வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படாமையுடன் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் நிறுவகத்தின் செயலாற்றல் மதிப்பீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக செயல் நடவடிக்கைத் திட்டம் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுற்றுலா வளங்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் மூலம் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்திற்கு தேசிய தொழிற்தகைமை (NVQ) பெற்றுக் கொள்வதற்கான ஆலோசனைகள் மற்றும் உதவிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், நிறுவகத்தால் இது வரையில் தேசிய தொழிற்தகைமையுடன் பாடநெறிகள் அடையாளங் காணப்படாமை காணப்பட்டது.

(ஆ) இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்திற்கு உரித்தான கட்டிடம் அமைந்துள்ள காணியில் உரிமையை இதுவரையில் விடுவிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவகத்தினால் எதிர்காலத்தில் ஓய்வூதிய நன்மைகளுக்கான பொறுப்புக்களைத் தீர்த்துக் கொள்ளும் நோக்குடன் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் செலுத்த வேண்டியிருந்த ஓய்வூதிய பணிக்கொடைக் தொகையான ரூபா 11,910,882 ஆன தொகை 2013 ஒக்தோபர் 30 ஆந் திகதியில் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் ஆனால் 2016 ஆம் வருடத்தின் இறுதியில் செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பணிக்கொடை ரூபா 29,530,921 இல் மிகுதித் தொகையான ரூபா 17,620,039 சம்பந்தமாக தேவையான முதலீடுகளைச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சமுத்திரா ஹோட்டலுக்கான மதுபான அனுமதிப்பத்திரமின்மையால் விற்பனை செய்ய முடியாது 2013 ஆம் வருடத்திலிருந்து பேணப்பட்டு வரும் ரூபா 83,540 ஆன மதுபான இருப்பு விற்பனை செய்யப்படாது விளைவற்றதாக காணப்பட்டன.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

சமுத்திரா ஹோட்டலில் ஆண்டிற்கான வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஹோட்டல் அறை இரவுகள் (Room Nights) 3660 காணப்பட்டதுடன் அதில் நிறுவகத்திற்கு அடையக் கூடியதாக இருந்த ஹோட்டல் அறை இரவுகள் 794 அதாவது நூற்றுக்கு 22 வீதமாக காணப்பட்டது.

### 4.4 வாகனப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தால் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனமொன்றின் உரிமையை மாற்றம் செய்வதற்கான சட்டரீதியான நடவடிக்கைகள் நிறுவகத்தால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒப்பந்தமொன்றை ஏற்படுத்திக் கொள்ளாது தனிப்பட்ட நிறுவனத்திற்கு வாகன சேவை வழங்கியமைக்காக நிறுவகத்தினால் 2014 ஆம் வருடத்தில் ரூபா 440,155 உம் 2015 ஆம் வருடத்தில் ரூபா 1,697,960 உம் மற்றும் 2016 ஆம் வருடத்தில் ரூபா 509,536 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 4.5 பெறுகை நடைமுறைகள்

பெறுகை நடைமுறைகளுக்கு முரணாக கொழும்பு ஹோட்டல் பாடசாலை மாணவர்களுக்காக உணவுக்கான மூலப் பொருட்களைக் கொள்வனவு செய்தமை தொடர்பாக 2016 ஆம் ஆண்டில் ரூபா 4,994,817 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் வரைவு வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2 வருட காலதாமதத்தின் பின்னர் 2019 ஏப்ரல் 18 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**5.2 உள்ளகக் கணக்காய்வு**

நிதிப்பிரமாணம் 133 மற்றும் 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கணக்காய்வு அறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் போது 16 வருமானம் மற்றும் செலவின விடயங்களில் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான எண்ணிக்கை இடையே நூற்றுக்கு 26 வீதத்திலிருந்து நூற்றுக்கு 158 வீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.4 வருடாந்த அறிக்கை சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவகத்தினால் 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை 2019 ஆகஸ்ட் 20 ஆந் திகதி வரையில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.5 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பின்வரும் குறைபாடுகள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) ஹோட்டல் பாடசாலைக்காக நன்கொடையாகக் கிடைக்கின்ற மதுபான வகைகள் களஞ்சியத்திற்கு கையளிக்கப்படாமல் உணவுப் பிரிவின் தலைவரின் பொறுப்பில் பதிவேடுகளுக்குக் கொண்டுவராமல் வைத்திருந்தார். அந்த இருப்புக்கள் பௌதீக பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் ரூபா 35,000 பெறுமதியான 12 வைன் போத்தல்கள் காணாமல் போயிருந்ததுடன் மேலும், 6 மதுபானப் போத்தல்களின் பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டதுடன், அவை மதுபான செயன்முறைப் பரிசோதனைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டமைக்கான சான்றுகளும் காணப்படவில்லை.

(ஆ) 2013 ஏப்ரல் மாதத்திலிருந்து 2014 யூன் 30 ஆந் திகதி வரையில் நிறுவகத்தின் பதவியணியினருக்கு லொன்றி சேவைகளை வழங்கியமைக்காக ஏற்பட்ட நேர்க்கிரயம் ரூபா 887,028 ஆகும். இக்கிரயம் பதவியணியினரிடமிருந்து அறவிடப்படவில்லை.

(இ) நிறுவகத்தின் உணவுப் பிரிவிற்கு சேர்க்கப்பட்ட இரண்டு விரிவுரையாளர்களுக்கு 2013 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் முதல் 2014 ஆம் ஆண்டின் யூன் மாதம் வரை வகுப்பறிக்கை புத்தகத்தின் படி நிகழ்ச்சித்திட்ட விரிவுரை மணித்தியாலத்தின் அளவை விஞ்சி ரூபா 972,865 செலுத்தப்பட்டிருந்தது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின்கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு